# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**முறையீட்டு மனு எண். 1370/ந/2019**

**நாள் : 24/01/2020**

**மறைமலை நகர் நகராட்சிப்
பணியாளர்கள் மற்றும் ஊழியர்கள், – முறையீட்டு மனுதாரர்கள்
செங்கல்பட்டு மண்டலம்.**

**திருமதி வ. விஜயகுமாரி,
நகராட்சி ஆணையாளர், – எதிர் மனுதாரர்
மறைமலை நகர் நகராட்சி.**

செங்கல்பட்டு மாவட்டம், மறைமலை நகர் நகராட்சி ஆணையர் மீதான இரண்டு குற்ற முறையீட்டு மனுக்கள் அனுப்புநர் முகவரி மற்றும் கையொப்பமின்றி மறைமலை நகராட்சிப் பணியாளர்கள் மற்றும் ஊழியர்கள் என்ற பெயரில் இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டன. மேற்குறிப்பிட்ட மனுக்கள் சம்பந்தமாக மறைமலை நகர் நகராட்சி ஆணையாளர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் விசாரணையின் போது அவர் அளித்த வாக்குமூலம் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

செங்கல்பட்டு மாவட்டம், மறைமலை நகர் நகராட்சிப் பணியாளர்கள் மற்றும் ஊழியர்கள் என்ற பெயரில், பெறப்பட்ட மேற்குறிப்பிட்ட இரண்டு குற்ற முறையீட்டு மனுக்களில் மறைமலை நகர் நகராட்சி ஆணையர் திருமதி வ. விஜயகுமாரி குறித்து கீழ்க்காணும் புகார்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

1. பல லட்சங்கள் கையூட்டாகப் பெற்று புறம்போக்கு நிலத்தில் கட்டட அனுமதி வழங்கியது ;
2. சுகாதாரப் பிரிவுக்கான பொருட்கள் வாங்காமலேயே ஒப்பந்த நிறுவனங்கள் பெயரில் காசோலை வழங்கி கமிஷன் பெறுவது ;
3. எழுது பொருட்கள் வாங்குவதிலும் கூடுதலான பட்டியல் தொகை போட்டு கமிஷன் பெறுவது ;
4. தணிக்கைத் துறையினருக்கு கையூட்டு வழங்கி முறைகேடுகள் சம்பந்தப்பட்ட கோப்புகளை தணிக்கைக்கு உட்படுத்தாமல் இருப்பது ;
5. திருவேற்காடு நகராட்சியில் தனது உறவினர்கள் பெயரில் இரண்டு வீடுகள் வாங்கியுள்ளது ;
6. திருவேற்காடு நகராட்சியில் பணியாற்றிய போதும் ஊழல் முறைகேட்டில் ஈடுபட்டது.

2. மேற்குறிப்பிட்ட குற்ற முறையீடுகள் குறித்து எதிர்மனுதாரரான நகராட்சி ஆணையாளர் திருமதி விஜயகுமாரி தனது எழுத்துபூர்வமான அறிக்கையினை தாக்கல் செய்ததுடன் 20.01.2020 அன்று நடைபெற்ற விசாரணைக்கும் வருகை தந்து வாக்குமூலம் அளித்தார். தான் ஏற்கனவே அரக்கோணம், திருவேற்காடு மற்றும் பம்மல் நகராட்சிகளில் பணியாற்றி பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளதாகவும், இதுபோன்ற புகார்கள் அந்நகராட்சிகளில் பணியாற்றிய போது வரப்பெறவில்லை என்றும், வேண்டுமென்றே காழ்ப்புணர்ச்சி காரணமாக திட்டமிட்டே உள்நோக்கத்துடன் அவதூறு செய்ய செய்ய வேண்டும் என்று இப்புகார் மனுவினை அளித்துள்ளனர் என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள புகார்களை 20.01.2020 அன்று நடைபெற்ற விசாரணையின் போது மறுத்துள்ளதுடன் புறம்போக்கு நிலத்தில் கட்டடம் கட்ட கட்டட அனுமதி தன்னால் வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார். தன் குடும்ப உறுப்பினர்கள் ரியல் எஸ்டேட் தொழிலில் ஈடுபட்டிருக்கவில்லை என்றும், போலி பில்கள் மூலம் நிதி முறைகேடுகள் எதுவும் செய்யவில்லை என்றும் தெரிவித்தார். அரசு பணிக்கு வருவதற்கு முன்பு இருந்த சொத்துக்கள்தான் தற்பொழுதும் உள்ளன என்றும் புதுச் சொத்துக்கள் எதுவும் வாங்கப்படவில்லை என்றும் தெரிவித்து தன் மீது புனையப்பட்ட பொய்யான குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்குமாறும் விசாரணையின் போது கேட்டுக்கொண்டார்.

3. மறைமலை நகர் நகராட்சிப் பணியாளர்கள் மற்றும் மறைமலை நகர் நகராட்சி ஊழியர்கள் பெயரில் இரண்டு மனுக்கள் அரசின் பல்வேறு துறைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அதன் நகல் இம்முறைமன்ற நடுவத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளன. குற்ற முறையீட்டு மனுக்களில் அனுப்புநரின் முகவரி குறிப்பிடப்படாததுடன் கையொப்பமிடப் படாமல் அனாமதேய மனுக்களாகவே அனுப்பப்பட்டுள்ளன. மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு உரிய ஆதார ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், எதிர்மனுதாரரும் தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்துள்ள நிலையிலும் குற்ற முறையீடுகளுக்கு ஆதார ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத நிலையிலும் மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனுவினை நிராகரித்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**2020**–ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள், **24**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

20.1.20

செயலாளர்.

29.1.2020

29/1/2020

பெறுநர்

**திருமதி வ. விஜயகுமாரி,**
**நகராட்சி ஆணையாளர்,**
**மறைமலை நகர் நகராட்சி,**
**மறைமலை நகர்,**
**செங்கல்பட்டு மாவட்டம்.**

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி